# ஹரிசித்தி மாதா

## சாந்திப்பிரியா



மத்தியப் பிரதேசத்தில் தந்திர, மந்திர சக்தியை உள்ளடக்கிய ஆலயங்கள் பல உள்ளன. முன்னர் நான் கூறியது போல மன்னன் விக்ரமாதித்தியன் ஆண்ட இடங்களில் மந்திர, தந்திர சக்திகள் அடங்கிய பல ஆலயங்களை அவர் நிறுவி உள்ளார். அப்படிப்பட்ட ஆலயங்களுக்கு சென்று பூஜைகள் செய்து வழிபடுவது அவரது வழக்கமாம். அப்படி அவர் நிறுவிய ஆலயங்களில் ஒன்றே உஜ்ஜயினியில் உள்ள ஹர்சித்தி மாதா ஆலயம் ஆகும். இந்த ஆலயம் 51 சக்தி பீடங்களில் ஒன்று என்பதாக கூறப்படுகின்றது.

சிவபெருமான் தனது மனைவியை தூக்கிக் கொண்டு போனபோது பார்வதியின் முழங்கையின் எலும்பு இங்குதான் விழுந்ததாம்.

உலகின் பல இடங்களிலும் ஹர்சித்தி மாதாவின் ஆலயங்கள் உள்ளன. இந்த ஆலயத்தின் கருவறையில் மூன்று தேவிகள், ஒருவருக்கு கீழே ஒருவராக பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளார்கள். மேலே உள்ள தேவி மஹா சரஸ்வதி ஆகும். அதன் கீழ் உள்ள தேவி சற்றே பெரிய உருவத்தில் செதுக்கப்பட்டு உள்ள ஹர்சித்தி தேவியாகும். மூன்றாவதாக கீழே உள்ள தேவி காளி தேவியாகும். ஹர்சித்தி தேவி சற்றே கருமையான செந்தூர நிறத்தில் காணப்படுகிறாள். கருவறைக்குள் நுழைவதற்கு முன் உள்ள நுழை மண்டபத்தில் துர்கா தேவியின் ஒன்பது வடிவங்களைக் குறிக்கும் ஸ்ரீசக்கர யந்திரம் உட்பட ஐம்பது தாந்த்ரீக, மந்திர சக்தி வாய்ந்த தெய்வங்கள் அதன் மேற்கூரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளன. இது இந்த ஆலயத்தின் ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

இந்த ஆலயம் அன்றைய உஜ்ஜையினி பேரரசனாக இருந்த விக்ரமாதித்யனால் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது, அவர் புத்திசாலித்தனம், வீரம் மற்றும் மேன்மையான குணத்தைக் கொண்டவர். அவர் ஒருமுறை கோய்லா துங்கர் எனும் இடத்தில் உள்ள ஹர்சித்தி மாதாவின் மூல ஆலயத்திற்கு விஜயம் செய்தபோது அங்கு அவருக்கு அந்த தேவியின் அருள் கிடைத்தது. அப்போது அந்த தேவி உஜ்ஜயினிக்கு வந்து, தான் அமைக்க உள்ள ஆலயத்தில் குடி இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு மந்திர, தந்திர சக்திகளைக் கொண்ட இந்த ஆலயத்தை கட்டியுள்ளார் என்று கூறுகின்றார்கள். இன்னும் சிலர் விக்ரமாதித்தியன் விஜயம் செய்த அந்த ஆலயம் மினால்பூர் என்று சொல்லப்படும் மியானி என்னும் இடத்தில், ஸ்ரீ கிருஷ்ண

பரமாத்மாவால் கட்டப்பட்டு அவரால் பூஜை செய்யப்பட்டு வந்திருந்த ஹர்சித்தி தேவி ஆலயம் என்று கூறுகின்றார்கள். அதன் பிறகே உஜ்ஜயினியில் ஸ்வயம்புவாகத் தோன்றி இருந்த பகவான் கிருஷ்ணர் பூஜித்த அதே ஹர்சித்தி தேவியை பிரதிஷ்டை செய்தே இந்த ஆலயத்தை மன்னன் விக்ரமாதித்தியன் காட்டினார் என்றும் சொல்கிறார்கள். மியானி மற்றும் கோய்லா துங்கர் எனும் இரு இடங்களும் குஜராத் மாநிலத்தில் உள்ள போர்பந்தரிலிருந்து முப்பது கி.மீ. தொலைவில் உள்ளன என்பதாக கூறுகின்றார்கள். எப்போதெல்லாம் தனக்கு பிரச்சனைகள் ஏற்படுமோ அப்போதெல்லாம் மன்னன் விக்ரமாதித்தியன் பகலாமுகி மற்றும் ஹர்சித்தி ஆலயங்களுக்கு சென்று பூஜைகளை செய்ய அவரது பிரச்சனைகள் தீர்த்து வந்தனவாம்.

அதன் பிறகு அந்த ஆலயம் 1447 ஆம் ஆண்டு மராட்டிய பேரரசர்களின் ஆட்சியின் போது புதுப்பிக்கப்பட்டு உள்ளது என்பதாக கூறுகின்றார்கள். இந்த கோவிலில் 1008 எண்ணெய் விளக்கு ஏற்றி வைக்கும் வகையில் இரண்டு உயரமான ஊசி இலை வடிவைப் போன்ற தூண்கள் உள்ளன. அந்த எண்ணெய் விளக்குகளை திருவிழா காலங்களில், முக்கியமாக நவரத்தாரி காலத்தில் ஏற்றுவார்கள்.

இந்த கோவில் அமைக்கப்பட்டதைக் குறித்த இரண்டு கதைகள் உள்ளன. சிவ புராணத்தின்படி, மனைவியின் உடலை யாக நெருப்பிலிருந்து சிவபெருமான் தூக்கிக் கொண்டு சென்றபோது, அவளுடைய முழங்கையின் எலும்பு தற்போது உள்ள கோயில் தளத்தில் விழுந்ததாம். இதனால்தான் இங்கு ஹர்சித்தி தேவியின் ஆலயம் எழுந்துள்ளதாம். இரண்டாவது கதை ஸ்கந்த புராணத்தில் காணப்படுகின்றது. ஒருமுறை சிவனும் பார்வதியும்

கைலாஷ் மலையில் தனியாக தாயம் விளையாடிக் கொண்டு இருந்தபோது, சந்த் மற்றும் பிரச்சந்த் என்ற இரண்டு அசுரர்கள் அங்கு வந்து உள்ளே செல்ல முயன்றனர். சிவபெருமானின் தெய்வீக வாகனமான நந்தியை அசுரர்கள் தாக்கி படுகாயப்படுத்தினார்கள். அவர்கள் பெற்று இருந்த அசாதாரண வரங்களினால் சிவபெருமானால் அவர்களை அழிக்க முடியவில்லை என்பதினால் தனது மனைவியை ஹர்சித்தி தேவியின் உருவை எடுக்கச் சொல்லி அவர்களை அழிக்குமாறு கூறினார் . பார்வதியும் மூன்று தெய்வங்களின் அதாவது அன்னபூர்ணா தேவி, மற்றும் காளி தேவியுடன் சேர்ந்த சக்திகளை தம்முள் அடக்கிக் கொண்டு அந்த அசுரர்களை அழித்தாள். சாண்டி தேவி தன்னுள் அடக்கிக் கொண்டு இருந்த மூன்று தேவிகளின் சக்திகளும் அந்த அசுரர்களுக்கு வரங்களினால் கிடைத்து இருந்த சக்தியை அழிக்கும் வகையிலான சக்திகளை பெற்று இருந்தன. ஆகவே, சிவபெருமான் அவளை ஆராதிப்பவர்களுக்கு அனைத்து வெற்றிகளும் கிடைக்கும் என்ற அர்த்தத்தில் ஹர்சித்தி மாதா என்று பெயர் சூட்டினார்.

க்ஷத்திரிய, பிராமண, ராஜ்புத் மற்றும் வைஷ்ய சமூகங்கள் போன்ற சில சமூகங்களுக்கு அந்த தேவியே குடும்ப தெய்வமாக இருக்கின்றாள். மீனவர்கள் மற்றும் கடல் சம்மந்தப்பட்ட தொழிலில் உள்ள பிற பழங்குடியினர் சிலரும் கடலில் கப்பலில் செல்லும் தமக்கு அவளே பாதுகாவலராக இருக்கின்றாள் என நினைத்து அவளை வணங்குகின்றார்கள்.

ஹர்சித்தி மாதா ஆலயத்தில் உள்ள மஹாமாயா எனும் தேவியின் சன்னதியும் சக்தி வாய்ந்தது. தரை மட்டத்துக்கு கீழே ஒரு சிறு அறையில் அமைக்கப்பட்டு உள்ள அவளது சன்னதியில் பக்தர்கள்

அனுமதிக்கப்படுவது இல்லை. பூசாரி மட்டுமே செல்வார். ஆனால் அந்த தேவியை அந்த சன்னதியை சுற்றி மேலே எழுப்பட்டு உள்ள சுவற்றின் துவாரம் வழியேதான் தரிசிக்க முடியும். மஹாமாயா துர்கையின் அம்சம். அவளை அங்கு வணங்கித் துதிப்பதின் மூலம் திருஷ்டி தோஷங்கள் விலகுமாம். அந்த சன்னதியில் இடைவிடாது எரியும் அகண்ட ஜ்யோதியும் வைக்கப்பட்டு உள்ளது. அதன் எதிரில் வினாயகர் சன்னதியும் உள்ளது.

ஹர்சித்தி ஆலயத்தில் ஸ்ரீ கர்கோடேஷ்வர் மகாதேவ் ஆலயமும் உள்ளது. ஒருமுறை பாம்புகளுக்கு கிடைத்த சாபத்தின்படி அனைத்து பாம்புகளும் ஜனமேஜயா நடத்திய யாகத்தில் விழுந்து எரிந்து போக இருந்தன. ஆகவே தம்மை காப்பாற்றிக் கொள்ள அவை பலவும் இமயமலைக்கு தவம் செய்யச் சென்று விட்டன. அப்போது பாம்புகளின் தலைவரான கார்கோடன் பிரம்மாவிடம் சென்று அதற்கு பரிகாரம் கேட்க, அவரும் உஜ்ஜயினியில் இருந்த மஹாகால் காட்டுக்கு சென்று அங்கு சிவபெருமானை துதித்து தவம் இருந்தால் விமோசனம் கிடைக்கும் என்று கூற, கார்கோடன் அனைத்து பாம்புகளையும் அழைத்துக் கொண்டு மஹாகால் காட்டுக்கு சென்று தவம் இருக்க, அவர்களது தவத்தினால் மனம் மகிழ்ந்து போன சிவபெருமானும் அவர்கள் முன் தோன்றி இனி யாராலும் அவர்கள் வம்சத்தை அழிக்க முடியாது என்ற வரத்தை தந்தார். அதுமட்டும் அல்லாமல் கார்கோடனை அங்கேயே ஒரு ஆலயத்தில் கார்கோடேஸ்வர மஹாதேவ் எனும் பெயரில் தங்கி இருக்குமாறும் அவரை அங்கே வந்து ஆராதிப்பவர்களுக்கு நாக தோஷம் தீரும் என்றும் கூறினார். அதனால்தான் ஹர்சித்தி ஆலய வளாகத்தில் ஸ்ரீ கர்கோடேஷ்வர் மகாதேவ் ஆலயம் உள்ளது. உலகில் உள்ள அனைத்து நாகங்களின் மந்திரத்தையும் உச்சாடனம் செய்து கார்கோடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு

உள்ளார் என்பதினால் அவர் சன்னதியில் சென்று நாக தோஷ நிவாரண யாகம் செய்தால் பூர்வ ஜென்ம சர்ப தோஷ பாபங்கள் அனைத்தும் நீங்கும் என்பதும் நம்பிக்கை.

**(Read further story on this temple in :**

**https://santhipriya.com/2013/10/மால்வா-மத்ய-பிரதேசம்-மாவ-14.html )**

# Hari Sidhi Devi Temple

## Santhipriya



Many temples with tantric and magical powers have been established in Madhya Pradesh. As I have said before, King Vikramaditya has established temples embodied with magical and tantric powers in few places. He visited those temples to offer prayer and worship. One such temple established by him has

been for Goddess Harsiddhi Devi temple in Ujjain, which is also one of the 51 major Shakti Piths of India. Legend has it that when Lord Shiva carried his consort on his shoulders, the elbow of Goddess Parvati fell here.

The Harsiddhi Devi temple has been established in many places. In the sanctum of her temple in Ujjain are three Devis enshrined one below the other. The one on top is Goddess Maha Saraswathi followed by the principal deity Goddess Harsiddhi (She is actually Maha Lakshmi also referred here as Goddess Annapoorna) who is and sculpted quite bigger in size. The third Devi below the pedestal is Goddess Kali Devi. Goddess Harsiddhi Mata, is painted in dark vermillion color. Before entering the sanctum one can see the main hall where fifty tantric deities including Sree Chakra which represent the nine forms of goddess Durga have been enshrined on the inner roof top of the hall. The presence of Shree Yanthra which represents nine forms of Durga is one of the characteristic features of this temple.

Harsiddhi temple is said to have been built by Emperor Vikramaditya, the then ruler of Ujjain, who was a man of great intellect, valor and nobleness. He once visited the main temple of Goddess Harsiddhi at a place called Koila Tungar in Gujarat where he got the grace of the Goddess Harsiddhi. After offering prayers, he requested the Goddess to come to Ujjain and stay in a temple which he proposed to build for her and accordingly after he returned to Ujjain he constructed a temple for Goddess Harsiddhi embodied with tantric and mantra powers. However some people believe that the temple which Emperor Vikramaditya visited was in Minalpur near Miani also in Gujarat. Both Koila Tungar

and Minalpur are 30 KM from the city of Porbhandar in Gujarat. The Minalpur temple was reportedly built and worshiped by Lord Krishna at Miani. It is believed that the same deity worshiped by Lord Krishna self-appeared in Ujjain where the present temple exists and Emperor Vikramaditya enshrined the same deity in the temple built by him. Whenever the Emperor faced any problem, he used to visit both Bhagalamuki and Harsiddhi temples to offer prayers to the Goddesses there to get the problem redressed.

Subsequently during the rule of Maratha emperors, the present temple has been renovated and rebuilt in the year 1447. The temple has two towering pine shaped pillars (Columns or Sthamb in Hindi) to hold 1008 oil lamps that are lit up on the eve of every festival especially during the festival of Navaratri.

Two legends are told on this temple. According to the Shiva Purana, when Lord Shiva carried away the burning body of Sati from the sacrificial fire in Daksha Yagna, her elbow dropped at the present temple site and thus the Goddess Harsiddhi Devi temple came up in this place. The second story is in Skanda Purana about the manner in which the Goddess Chandi acquired the epithet of Goddess Harsiddhi. Once when Lord Shiva and Goddess Parvati were playing some game alone in Mount Kailash, two demons tried to force their way into their abode. The demons attacked even Lord Shiva's carrier vehicle Divine Nandi grievously injuring him. Since Lord Shiva could not vanquish them as the demons carried extraordinary powers because of some boons begot by them, Lord Shiva called upon his wife to take the form of Chandi and destroy them. Embodied with the

powers of three Goddesses i.e herself, Goddess Annapoorna, and Goddess Kali, whose combined powers negated the powers of the boons the demons carried, she attacked the demons and killed them. Hence Lord Shiva nicknamed her as Goddess Harsiddhi meaning 'the goddess who would always grant success when prayed'.

Communities like Kshatriya, Brahmin, Rajput and Vaishya worship Harsiddhi Devi as their Kuladevatha (Family deity). Similarly fishermen and other tribes engaged in sea-related business too adore the Goddess because they believe that she guard them over the sea.

The shrine of Goddess Mahamaya in the Harshiddi Mata temple is also believed to be a powerful Goddess. Devotees are not allowed to enter into her sanctum, which is below ground level with a narrow passage, where she has been enshrined. Only the priest are allowed to enter the sanctum to perform Pooja to her and the devotees worship her through a grilled window installed in ground level. It is generally believed that all the ill effects of past karmas (Dosha in Sanskrit) would get removed. An oil lamp kept there continue to burn uninterrupted over several years. There is a small sanctum for Lord Ganesh opposite to this sanctum.

The Harsiddhi Devi Temple also houses a mini temple for Karkoteshwar Mahadev Temple. The legend connected to Karkoteshwar acquiring the epithets Karkoteshwar Mahadev is this. Due to a curse once received by the serpents, the serpents would fall in to the pyre of a Yagna performed by Janamejaya and meet

death. So many of them went to the Himalayas to perform penance to save themselves. Serpent King Karkotan went to Lord Brahma and sought solution to escape the wrath of falling into the pyre to meet death. Lord Brahma advised them to go to Mahakaleshwar forest in Ujjain and pray to Lord Shiva. Immediately Serpent Karkotan went to Mahakaleshwar forest along with other serpents and sat in penance at the end of which Lord Shiva appeared before him and fulfilled his prayer thus ending their nightmare. Pleased Lord Shiva advised Serpent King Karkotan to sit there in a temple in the name of Karkoteshwar Mahadev and bless the devotees get rid of the sins accrued out of killing serpent by some members in their family even in the past generations. Hence a mini temple has been constructed for Karkotan in the name of Karkoteshwar Mahadev in which the Serpent King Karkotan has been enshrined with chants of specific mantras relevant to divine serpents across the universe. It is believed that those who perform Naga Dosha ritual there get rid of their past karmas borne out of sins accrued out of killing serpents by any members in their family including by their predecessors.

**(Read the same in the following link too : https://santhipriya.com/2021/01/harsiddhi-matha-temple-ujjain.html)**